"மௌனம் உடைக்கும் மழலைக் குரல்!"

கீச்சுகள்

# நம் வாழ்வில் சிறந்த பெண்கள்

## பெண் சக்தி



இதழ் 02 | 2026

# இதழ் உள்ளடக்கச் சுருக்கம்

**இதழின் மையப்பொருள்: "என் வாழ்வில் சிறந்த பெண்மணி" (The Best Woman in My Life)**

இந்த இதழ், கிராமப்புற மாலைப்பள்ளி மாணவர்களின் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் ஒரு களமாகும். சர்வதேச மகளிர் தினத்தை முன்னொட்டி, குழந்தைகள் தங்களின் வாழ்வில் தங்களைச் செதுக்கிய பெண்களைப் பற்றியும், சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்திய பெண் ஆளுமைகளைப் பற்றியும் எழுதிய கவிதைகள், கட்டுரைகள் மற்றும் வரைந்த ஓவியங்களின் தொகுப்பாக இது அமைகிறது.

## பதிப்பாசிரியர் குழு



**அஜய் வில்லியம்ஸ்**
திட்ட வியூகவியலாளர்,
அசிஸ்ட்- சமூக மேம்பாட்டு அலுவலகம்
ஆசிரியர், கீச்சுக்கல்.



**அ. மோனிஷா**
மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்
திண்டுக்கல்



**லாரன்ஸ்**
மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்
புளியடித்தமம்



**சேதுபதி**
மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்
திருச்சி



**வசந்த்**
மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்
தூத்துக்குடி



# உரிமைக்கான தேடல்: சிறுவர் மேம்பாட்டில் ஒரு புதிய மைல்கல்

இந்த இதழ், நமது *மாலை நேரக் கல்வி மைய (EVENING STUDY CENTERS)* மாணவர்களால் மிக அழகாக வடிவமைக்கப்பட்ட, அவர்கள் வாழ்வில் இடம்பிடித்த "சிறந்த பெண்களைக்" கொண்டாடும் ஒரு இதயப்பூர்வமான சமர்ப்பணம் ஆகும். இது வெறும் எழுத்துக்கள் மட்டுமல்ல; நம் குழந்தைகள் வகுப்பறையைத் தாண்டி, தங்களைச் செதுக்கிய பெண்களின் வலிமை, அன்பு மற்றும் தலைமைத்துவத்தைப் பிரதிபலிக்கும் நன்றியுணர்வுப் பெட்டகம்.

பன்முகத்திறன் கொண்ட ஒரு அஞ்சலி

ஒவ்வொரு குழந்தையின் தனித்திறனுக்கும் குரல் கொடுக்கும் வகையில், பல்வேறு ஆக்கபூர்வமான வடிவங்களில் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த அவர்களை ஊக்கப்படுத்தினோம்:

• கட்டுரைகள்: முன்மாதிரியாகத் திகழும் பெண்களின் பங்களிப்புகள் மற்றும் விழுமியங்கள் குறித்த ஆழமான சிந்தனைகள்.
• கவிதைகள்: தங்களுக்குப் பிடித்தமான பெண்களின் உணர்வுகளையும் மாண்பையும் போற்றும் சந்த நயமிக்க வரிகள்.
• கதைகள்: தைரியம், கருணை மற்றும் அன்றாட வாழ்வின் சாதனைகளை விளக்கும் கதைக்கருக்கள்.
• ஓவியங்கள்: வார்த்தைகளால் விவரிக்க முடியாத அன்பை வெளிப்படுத்தும் வண்ணமயமான சித்திரங்கள்.

படைப்பாற்றல் வழி வளர்ச்சி

தங்களின் நாயகிகளைப் பற்றி ஆவணப்படுத்துவதன் மூலம், நம் குழந்தைகள் *செயல்வழிக் கற்றல் (ACTIVITY-BASED LEARNING)* முறையில் ஈடுபடுகின்றனர். இது அவர்களின் எழுத்தறிவு மற்றும் சமூக விழிப்புணர்வை மேம்படுத்துவதோடு, மனித உரிமைகள் மற்றும் பெண் முன்னேற்றத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளவும் உதவுகிறது.

இந்த இதழை நீங்கள் வாசிக்கும்போது, நம் குழந்தைகளின் பார்வையில் இந்த உலகம் எவ்வளவு அற்புதமானது என்பதையும், அது சிறந்த பெண்களின் அடித்தளத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளதையும் நீங்கள் உணரலாம்.

*வாசிப்போம்... மகிழ்வோம்!*

Sr. Joseph Prett

**அருட்சகோதரி. ஜோசப் பிரிட்டென்சியா,**
சிறுவர் மேம்பாட்டுத் துறை
ஒருங்கிணைப்பாளர், அசிஸ்ட் (ASSIST).

# கவிதை

ஆகாயம் ஓடும் இரத்த நாடி
நரம்பெல்லாம் உன் வாசம்
உன் வியர்வை துளிதான்
நான் படிக்கும் இதிகாசம்.


உன்னை போல பூமியும் இல்லை
உன்னை விட உயர்ந்த சாமியும் இல்லை.

அதை சொல்ல வார்த்தை ஏதுமில்லை
உன் சொல்லுக்கு வேதம் ஏதுமில்லை.

பெண்ணே, உன் அன்புக்கு ஈடாகுமா !
கண்டிக்கும்உன்னோட பாசத்துக்கு
முன்னே கடவுளும் கூட நிகரில்லை
அம்மா... ♡

முத்துக்கவின் . ர
வகுப்பு - 6
எப்போதும்வென்றான்
கீழஈரால்





# கட்டுரை

ஒரு காலத்தில் வீட்டிற்குள் மட்டுமே கட்டுப்படுத்தப்பட்ட பெண்கள், இப்போது "வானத்தில் பறக்கிறார்கள்" என்பதன் சிறப்பம்சங்கள். இது பெண்களை கடவுளின் உன்னத படைப்புகளாக விவரிக்கிறது, அன்பு, ஆதரவு மற்றும் பொறுமை ஆகியவற்றை உள்ளடக்கியது.

வேலு நாச்சியார் :
வருங்கால சந்ததியினருக்கு துணிச்சலான முன்மாதிரியாக விளங்கி, ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்து போராடிய முதல் பெண் சுதந்திரப் போராட்ட வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றார்.

ஜெயலலிதா :
எம்.ஜி.ஆரைத் தொடர்ந்து தமிழக முதல்வராகத் தனது தலைமைப் பொறுப்பை ஏற்று, "அம்மா" என்று அன்புடன் அழைக்கப்பட்டு நாட்டுக்கு எவ்வளவு நல்லது செய்தார் என்பதைக் குறிப்பிட்டார்.

விளையாட்டில் பெண்கள் : பெண்கள் இனி வெறும் பார்வையாளர்கள் மட்டுமல்ல, செயலில் சாதனையாளர்களாக இருக்கிறார்கள் என்று குறிப்பிடுகிறார். இதில் ஷஃபாலி வர்மா (கிரிக்கெட்), சானியா மிர்சா (டென்னிஸ்), சாய்னா நேவால் மற்றும் பி.வி. சிந்து (பேட்மிண்டன்).
முடிவு: விவசாயம், விண்வெளி முதல் அரசியல், ராணுவம் என அனைத்துத் துறைகளிலும் பெண்கள் சாதித்து வருகின்றனர். சர்வதேச மகளிர் தினம் (மார்ச் 8) அவர்களின் தியாகங்களையும் சாதனைகளையும் போற்றும் வகையில் கொண்டாடப்படுகிறது என்று குறிப்பிடுகிறது.

“வாழ்க வளமுடன்”, “வாழ்க வையகம்” என்ற முழக்கங்களோடு முடிகிறது.

**ஐஸ்வர்யா . உ**
**வகுப்பு - 7**
**எட்டயபுரம்.**
**கீழஈரால்**





# ஓவியம்






காவ்யா.ப
வகுப்பு - 7
இளம்புவனம்
கீழஈரால்

# கவிதை

**என் வாழ்வு சிறந்த பெண்மணி**

பிறப்பின் போது கஷ்டப்பட்டு
வளர்ப்பின் போது துன்பப்பட்டு
குடிகாரனுக்கு வாக்கப்பட்டு
அனுதினமும் துயரப்பட்டு

பிள்ளைகள் ஆறு பெற்றாலும்
ஒரு பிள்ளையை மட்டும்
கடவுள் தந்தாலும்
மனம் தளராது வளர்த்தெடுத்து
பாசத்தை எல்லாம் நீ கொட்டி
வளர்த்த தாயே!

ஒரு தந்தை செய்ய வேண்டிய
கடமைகளை தனியாக நீ செய்தாய்
உன் பிள்ளை தலைநிமிர நீ உழைத்தாய்!

இருக்கும் போது உன் அருமை தெரியல
நீ இல்லாத போது உன்ன மறக்க முடியல
நீ இருக்கும் போது பாசத்த கொடுக்கல
இந்த கடனை எப்ப அடைப்பேனு தெரியல!

என்றும் உன் நினைவோடு நான்
அன்பிற்குரிய என் “அம்மா”

**கார்த்திகா.க**
**வகுப்பு - 6**
**இளம்புவனம்**
**கீழஈரால்**





# ஓவியம்






ஆ.ஜெர்ஸன் ஆறுமுகம்
வகுப்பு -7
இந்திராநகர்
புலியடிதம்மம்
சிவகங்கை

# கட்டுரை

**முன்னுரை :**
டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி இந்தியாவின் முதல் பெண் மருத்துவர், சமூக சீர்திருத்தவாதி மற்றும் தமிழக சட்டமன்றத்தின் முதல் பெண் உறுப்பினர் ஆவார். தேவதாசி முறை ஒழிப்பு, பெண்களுக்கு கல்வி மற்றும் மருத்துவ வசதிகளை மேம்படுத்துதல், அடையாறு புற்றுநோய் மருத்துவமனை மற்றும் அவ்வை இல்லத்தை நிறுவுதல் ஆகியவற்றில் முக்கிய பங்கு வகித்தார்.

**அறிமுகம்** :
புதுக்கோட்டையில் ஜூலை 30, 1886 இல் பிறந்த முத்துலட்சுமி ரெட்டி, பல தடைகளைத் தாண்டி மருத்துவத் துறையில் சாதித்தவர். ஆசியாவிலேயே முதல் பெண் மருத்துவப் பட்டதாரி என்ற பெருமைக்குரியவர்.

**கல்வி மற்றும் மருத்துவப் பணி :**
ஆண்களே பயின்று வந்த காலத்தில் சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து 1912இல் மருத்துவர் ஆனார். ஏழைப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு இலவச சிகிச்சை அளித்தார்.

**சமூகச் சீர்திருத்தங்கள் :**
தேவதாசி முறை ஒழிப்பு : தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட முக்கிய காரணகர்த்தாவாக இருந்தார்.

**பெண்கள் கல்வி** : பெண்கள் கல்வி கற்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அவ்வை இல்லம் : ஆதரவற்ற பெண்களுக்காக 'அவ்வை இல்லம்' தொடங்கினார்.

**புற்றுநோய் மருத்துவமனை :** அடையாறில் 1954 இல் புற்றுநோய் மருத்துவமனை நிறுவினார்.

**அரசியல் மற்றும் சாதனைகள் :**
சென்னை மாகாண சட்டசபையின் முதல் பெண் உறுப்பினர் மற்றும் துணை சபாநாயகராகப் பணியாற்றினார்.

இந்திய மாதர் சங்கத்தின் தலைவராக இருந்து பெண்களுக்காகப் பாடுபட்டார்.

1956 ஆம் ஆண்டு இந்திய அரசு இவருக்கு பத்ம பூஷண் விருது வழங்கி கௌரவித்தது.

**முடிவுரை** :
டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, தைரியம் மற்றும் சமூக சேவையின் அடையாளமாகத் திகழ்கிறார். இவரின் நினைவாக, தமிழ்நாடு அரசு மகப்பேறு நிதி உதவித் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

**தர்ஷினி . வே**
**வகுப்பு - 9**
**காட்டுநாயக்கன்பட்டி**
**கீழஈரால்**



# என் அம்மா



என்னை படைத்த மற்றும் நான்
வணங்கும் முதல் கடவுள் “என் அம்மா”

**தங்க மாரியப்பன்**
**வகுப்பு - 11**
**கீழஈரால்**



# கவிதை

என் வாழ்வில் சிறந்த பெண் என் அம்மா.

அம்மா...!!!
நான் வாழ நினைத்த...!!!
வாழ்க்கையை விட...!!!
எனக்காக கிடைத்த வாழ்க்கையே..!!
நீ மட்டும் தான் என் அழகிய தாயே...!!!
அதை தான் எப்போதுமே...!!!
சுவாசிக்க ஆசைப்படுகிறேன்...!!!
எனது மூச்சு இருக்கும் வரை அல்ல...!!
எனது மூச்சு ஆகிய நீ என்றுமே..!!
என்னுள்ளே இருக்கும் வரை....!!!!

**ர. தன்யஸ்ரீ**
**வகுப்பு -7**
**மடத்தான்புஞ்சை**
**புலியடிதம்மம்**
**சிவகங்கை**





கீச்சுகள்

# ஓவியம்






**ஆண்ட்ரியா**
**வகுப்பு: 5**
**வெல்லிங்டன்**
**நீலகிரி**

# கவிதை

**என் வாழ்வில் சிறந்த பெண்மணி!**

பெண்மையை போற்றுவோம்! பெண்ணுக்கு அதிகாரம் அளிப்போம்!
மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்!
பெண்ணைக் காப்போம்! பெண்கல்வியை ஊக்குவிப்போம்!
பெண் உயர்ந்தால் உலகம் உயர்வெய்தும்!
பெண் இன்றி அணுவும் அசையாது!
மென்மையும் வலிமையும் ஒரு சேரப் பெற்றவள் பெண்!
பெண் என்பவள் போகப் பொருள் அல்ல, பூமியின் புதிய அத்தியாயம்!
பெண் சக்தியே உலக சக்தி, அவளை மதிப்போம்! முன்னேறுவோம்!
தாய்மையின்றி தலைமுறை ஏது? பெண்களின்றி பிரபஞ்சம் ஏது?
உலகை நகர்த்தும் இயற்கை கடிகாரம் பெண்கள்!

**ஜெயசீலா.க**
**வகுப்பு - 9**
**மாதாபுரம்**
**கீழஈரால்**





# கவிதை

என் வாழ்க்கை ஒரு புத்தகம் என்றால்,
அதன் முதல் எழுத்து என் அம்மா.
என் கனவு ஒரு வானம் என்றால்,
அதன் முதல் நட்சத்திரம் என் அம்மா.

நான் நடக்க கற்றுக் கொண்ட பாதையில்,
என் கை பிடித்து வழிநடத்தியவள் அவள்.
நான் விழுந்த நேரங்களில் கூட,
என்னை எழுப்பிய வலிமை அவள்.

பசியை மறந்து உணவு அளிக்கும்,
அளவற்ற அன்பின் கடல் அவள்.
தன் கனவுகளை மறைத்து வைத்து,
என் கனவுகளை நிறைவேற்றும் தீபம் அவள்.


உலகம் முழுவதும் தேடினாலும்,
அவளுக்கு இணை யாரும் இல்லை.
"அம்மா" என்ற ஒரு சொல்லில்,
அனைத்து அன்பும் அடங்கியுள்ளது.

நான் உயர்ந்து நிற்கும் நாளில்,
என் வெற்றியின் பின்னால் இருப்பது அந்த
ஒரு பெண்.

என் வாழ்க்கையில் சிறந்த பெண், என்
அம்மா.

**மு. கவின் குமார்,**
**வகுப்பு -7**
**மேல்வாக்கோட்டை,**
**புலியடிதம்மம்**
**சிவகங்கை**






# கவிதை

அமைதி நிறைந்தவள்
ஆர்ப்பாட்டம் அற்றவள்
இன்முகம் கொண்டவள்
ஈகை குணம் மிகுந்தவள்
உண்மை உடையவள்
ஊக்கம் கொடுப்பவள்
எளிமை நிறைந்தவள்
ஏற்றம் காண்பவள்
ஐஸ்வர்யம் நிறைந்தவள்
ஒழுக்க நெறி உடையவள்
ஓடைநீர் போல் சிந்திப்பவள்
ஔஷதம் போன்றவள்

‘அ’ முதல் ‘ஔ’ வரையிலான உயிர்
எழுத்துக்கள் போல் உயிரிலும்
மேலானவள் “என் தோழி”




**ஸ்ரீதர்.ஜெ**
**வகுப்பு - 9**
**நற்கலைக்கோட்டை**
**கீழஊரால்**



# கவிதை

பெண்ணே!
உன்னை நீயே
செதுக்கிக் கொள்...
உளி கொண்டல்ல
வலி கொண்டு...!
உடனிருப்பவர் எவரும்
தோள் கொடுப்பார்
தூக்கி விடுவார்
என்றெண்ணி உன்
கனவைச் சிதைக்காதே...!
பழி சொல்லும்
ஊர் மடி...
வழி கேட்டு
நில்லாதே...
இவர்கள் இப்படித்தான் என்று
ஒரு துளி விழிநீர்
சிந்திவிட்டு
எழுந்து நில்...
துணிந்து செல்...!
பரந்த இவ்வுலகில்
உனக்கான கதவுகள்
எங்கோ திறந்திருக்கும்...!



**செ.திவ்னேஷ்**
**வகுப்பு-7**
**புலியடிதம்மம்**
**சிவகங்கை**



# ஓவியம்






**அ.கிரிஸ்பினா**
**வகுப்பு -7**
**புலியடிதம்மம்**
**சிவகங்கை**

# கவிதை

என் வாழ்க்கையில் சிறந்த பெண்

என் வாழ்க்கையில் வந்தவள்
என் மனதில் ஒளிதரும் நிலவாய்
என் துன்பம் எல்லாம் மறக்கச்
செய்து
என் நாளை அழகாக்கும் தேவதை

அவள் சிரிப்பு ஒரு இசை
அவள் வார்த்தை ஒரு மருந்து
என் வாழ்வில் நான் கண்ட
சிறந்த பெண் அவள் தான்..!!

என் பாதையில் நடந்தவள்
என் கனவுகளை புரிந்தவள்
என் தோல்வியில் துணையாய்
இருந்து
என் வெற்றியில் மகிழ்ந்தவள்

என் வாழ்க்கை ஒரு புத்தகம்
என்றில்
அதில் அழகான அத்தியாயம்
அவள்.
என் வாழ்வின் பெருமை
அந்த சிறந்த பெண் அவள் தான்..!!



**உ. சித்தார்த்,**
**வகுப்பு - 5**
**தெல்லியன்வயல்,**
**புலியடிதம்மம்**
**சிவகங்கை**



# கட்டுரை

**அம்மா பற்றிய வரிகள்:**
"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்கிறார் ஔவையார்.
என் அம்மா இல்லையேல் நான் இல்லை.
என் அம்மா என் மீது அளவு கடந்த அன்பு கொண்டுள்ளார்.
எங்கள் வீட்டில் உள்ள அனைவரையும் அக்கறையாகவும், பாசத்துடனும் கவனித்துக் கொள்வார்.
எனது சிறு வெற்றிகளையும் ஊக்குவிப்பார்.
தினமும் என்னுடை வீட்டுப் பாடங்கள் கற்க்க உதவுவார்.
நல்லொழுக்கங்களை எனக்கு போதிப்பார்.
எனது "தாயின் அன்பு விலைமதிப்பற்றது."

அன்னையைப் பாதுகாப்பது ஒவ்வொரு குழந்தையின் கடமையாகும்.
எனது வாழ்நாளில் இறைவன் எனக்கு அளித்த விலை மதிப்பில்லாத பொக்கிஷம் எனது அம்மா தான்.
அம்மா என்ற சொல்லின் பொருளாக அன்பு மற்றும் தியாகம் என்று சொல்லலாம்.
அன்னையர் தினம் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகிறது.
நம்மை இந்த உலகத்திற்க்கு அடையாளம் காட்டியவர் அன்னை மட்டுமே.
உலகில் அன்னை என்பவர் இல்லை என்றால், மனிதப் பிறப்பே இல்லை எனலாம்.
அன்னையர் தினம் என்பது அன்னா ஜார்விஸ் என்பவரால் அமெரிக்காவின் வெர்ஜினியாவின் கிராப்டன் நகரில் 1908 ம் ஆண்டு முதன் முதலில் தொடங்கப்பட்டது.



ஒரு தாயானவள் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்து, அதனை பாராட்டி சீராட்டி பாதுகாத்து தன்னையே அர்ப்பணிக்கிறாள்.
தனக்கென்று எதையும் வைத்துக்கொள்ளாமல் அனைத்தையும், தன் குழந்தைகளுக்கு விட்டுக் கொடுக்கும் அன்னைக்கு மரியாதை கொடுத்து, உயர்ந்த ஸ்தானத்தைக் கொடுக்க வேண்டும்.
"தாயிற் சிறந்த கோயிலும் இல்லை"
உலகில் எதற்கும் ஈடு இணையற்றது ஒன்று இருக்கிறது என்றால் அது அன்னையின் அன்புதான்.
பெண் என்பவள் தாயாக, சகோதரியாக, தாரமாக, தோழியாக, பாட்டியாக எனப் பல பாத்திரங்களில் வலம் வருகிறாள்.
ஒரு குழந்தைக்கு ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அம்மா என்ற உறவு இல்லையேல் அவள் அநாதை தான்.



**M. திவ்யா**
**வகுப்பு - 11**
**திட்டுக்கோட்டை**
**புலியடிதம்மம்**
**சிவகங்கை**



# கவிதை

**என் பாட்டி**

தாயைப் பெற்ற தாய் அவள்
என் முதல் தாயும் அவளே!

என் சிரித்த முகம் கண்டு
தன் கவலை மறந்தவள் அவள்!
கரம் பிடித்து நடக்க
கற்றுக் கொடுத்தவளும் அவளே!

நான் உண்ட உணவில்
மீதம் உண்டு மகிழ்ந்தவள் அவள்!
முதலில் அம்மா எனச்
சொல்லிக் கொடுத்தவளும் அவளே!

கோபமாய் அடிப்பது போல் அடித்து
கட்டி அரவணைப்பதும் அவள்!
கேட்டதை உடனே வாங்கிக்கொடுத்து
மகிழ்விப்பவளும் அவளே!

எப்படிச் சொல்ல
அவள் இல்லாத வாழ்க்கை
எனக்கு நரகமென்று?

தவிக்க விட்டுச் சென்றாயே தாயே
உன்னையின்றி எனக்கு
யாரு துணை இவ்வுலகில்?

**ராமு மகாலட்சுமி. பூ**
**வகுப்பு - 8**
**வாலம்பட்டி**
**கீழஈரால்**





# கட்டுரை

**தலைப்பு: என் வாழ்க்கையில் சிறந்த பெண்**

**முன்னுரை:**

என் வாழ்க்கையில் சிறந்த பெண் என்றால் அது என் தாய், சகோதரிகள், பெண்கள் அனைவரும் என் வாழ்க்கையில் சிறந்த பெண் ஆவார். ஆனால் என் அம்மாவை பிடிக்கும். என் அம்மா பெயர்: நதியா. எங்கள் ஊர்: வேலடித்தம்மம்.
என் வாழ்க்கையில் சிறந்த தைரியம் என்றால் இந்த பெண் தான். பெண்ணை பொருளாகப் பார்க்காமல் பெண்ணாகப் பாருங்கள். என் வாழ்க்கையில் ஆசிரியரும் ஒரு பெண் தான். அவர்கள் நம்மைப் படிக்க வைத்து, படிப்பு வராதவர்களையும் படிக்க வைப்பது என் கடமை என்று படிக்க வைப்பவர் தான் நம் ஆசிரியர்.
ஆசிரியர்களை மதித்து, கீழ்ப்படிந்தும் இருத்தல் வேண்டும். அதே போல் நம் சகோதரிகளையும் நம்பி நாம் அவர்களுக்கு தைரியத்தையும் மற்றும் உற்சாகத்தையும் ஒரு அண்ணன் அல்லது தம்பியாக நாம் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அதே போல் பெண்ணையும் நாம் எல்லாம் பெண்ணாகப் பார்க்கவும். இந்நாட்டின் இரு கண்கள் நம் பெண்கள் என முன்னுரையை முடித்துக் கொள்கின்றேன்.

**என் வாழ்க்கையில் அம்மா**

என்னை பத்து மாதம் சுமந்த என் தாய் என்னை ஊட்டி வளர்த்தும், என்னை படிக்க வைத்தும் என்னை விளையாட வைத்தும், என்னை ஊக்குவித்தும், தைரியத்தையும் வளர்த்து என்னை அதட்டாமலும், திட்டாமலும், என்னை பொக்கிஷம் போல் என்னை பெரிய ஆளாக்கின என் தாய் அவர்களுக்கு என்னை பிடிக்கும்.
அவர்களுக்கு நான் வீட்டில் உள்ள சிறு சிறு வேலைகளையும் அவர்களுக்குச் செய்வேன், அதனால் நான் கேட்கும் பொருட்களை வாங்கித் தருவார்கள். அதே போல் அவர்கள் எங்கே போகச் சொன்னாலும் நான் அங்கே போய் விடுவேன்.
ஆனால் என்னால் என் அம்மா இல்லாமல் என்னால் இருக்க முடியாது. என் அம்மாவும் என்னை விட்டு ஒரு நாள்கள் கூட பிரியாமல் இருப்பாள். ஆனால் என் அம்மா எனக்கு கிடைத்த டைமண்ட் (Diamond) என்று சொல்லலாம். இத்துடன் என் வாழ்க்கையில் அம்மா என்ற பயணத்தை முடித்துக் கொள்கிறேன்.

**என் அம்மாவின் சிறப்புகள்**

என் அம்மா தினமும் காலை 5:00 மணியளவில் எழுந்து விட்டு எங்களுக்குச் சாப்பாடு ஆக்கிவிட்டு 6:00 மணியளவில் அவர்கள் வேலைக்குச் சென்று விடுவார்கள். நாங்கள் 6:30 மணியளவில் எழுந்து விட்டு காலையில் குளித்துவிட்டு பள்ளிக் கூடத்திற்குச் சென்று விடுவோம். நான் அங்கே படித்துக் கொண்டிருப்போம்.
அப்போது என் அம்மா வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்து சற்று ஓய்வெடுத்து, மாலை தேனீர் இரவுச் சாப்பாடு தயார் பண்ணுவார்கள். நான் பள்ளிக்கூடம் போய்விட்டு, மாலை வகுப்பிற்குச் சென்று வருவோம். இரவு 7:00 மணியளவில் இரவுச் சாப்பாடு சாப்பிட்டுத் தூங்கி விடுவோம். இது என் அம்மாவின் சிறப்புகள்.

**முடிவுரை:**
எதை வேணாலும் காசு கொடுத்து வாங்கலாம் ஆனால் அம்மாவைக் காசு கொடுத்து வாங்க முடியாது. தாய் இல்லாமல் யாராலும் வாழ முடியாது. இவள் போல் வரம் எனக்கு கிடைக்காது. எல்லோரும் அம்மா இல்லாமல் வாழ முடியாது. நமக்கு முதல் தெய்வம் கடவுள், இரண்டாவது தெய்வம் தாய் என்று நான் இந்தத் தலைப்பை முடித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
என் அன்பு அம்மா,
நதியா.



**த.தமிழரசன்**
**வகுப்பு - 9**
**வேலடிதம்மம்**
**புலியடிதம்மம்**
**சிவகங்கை**



# கவிதை

**என் வாழ்க்கையில் சிறந்த பெண்....**

ஆறுதலில் தாயாக...
அரவணைப்பில் சேயாக...
அர்ப்பணிப்பில் மனைவியாக...
அனுசரிப்பில் மருமகளாக...

பொறுமையின் சிகரமாக...
போராடுவதில் போராளியாக...
தியாகத்தின் தலைமகள்...
அவள் அப்படித்தான்...

**ரா. ராஜலெட்சுமி**
**வகுப்பு - 10**
**வேம்பனி**
**புலியடிதம்மம்**
**சிவகங்கை**





# கவிதை

**என் வாழ்க்கையில் சிறந்த பெண்**

தமிழ் கவிதையை எழுதியவர்
பாரதியார்...
இவர்தான் என் தாயார்...
நவதானியத்தில் சாமிக்கு படைப்பது
மாமிசம்...
அம்மாதான் எனக்கு சந்தோஷம்...
வீட்டு சுவற்றில் அடிப்பது ஆணி...
அம்மாதான் எனக்கு ராணி...
தொலைக்காட்சியில் வருவது
பட்டிமன்ற நிகழ்ச்சி...
எனக்கு அம்மாதான் மகிழ்ச்சி...
டீ கடையில் பறப்பது ஆவி...
எங்க அம்மாதான் தேவி...
ஆசிரியர்கள் சொல்வது திறமையை
காமி...
எங்க அம்மாதான் சாமி...
கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி...
நோய்களுக்கு அம்மாதான் தடுப்பூசி...
நோட்டில் இருக்கும் பேப்பர்...
எங்க அம்மாதான் டாப்பர்...

**லா. ஆலன் ஹேவியோ**
**வகுப்பு : 8**
**உலகம்பட்டி**
**திண்டுக்கல்**





# கவிதை

ததோள்ககொடுக்கும்
ததோழியாய், வளம் ◌ேசர்க்கும்
மைனவியாய்,
அறிவைுரக்கும் அன்னையாய்,
பரிந்தைுரக்கும் மருமகளாய்,
குடும்பத் தைலவியாய், இடர்
வருைகயில் மதியூகியாய்,
வலம் வரும் நீ, வயது
பலவானாலும், வலது கரமாய்
திகழும் உன்னை தினம் தினம்
வாழ்த்த ◌ேவண்டுேம.
மகளிர் தின நல்வாழ்த்துக்கள்

**பத்மாவதி**
**வகுப்பு-9**
**மேலப்பகனூர்**
**திருச்சி**





# ஓவியம்





**கே. சாய் சரண்**
**வகுப்பு-4**
**பாகனூர்**
**திருச்சி**


# ஓவியம்





**Deepashree**
**வகுப்பு-4**
**பாகனூர்**
**திருச்சி**

# ஓவியம்





**V.Divya**
**வகுப்பு-9**
**பாகனூர்**
**திருச்சி**

# CHILDREN

## Seeds of Dawn

### Where Dreams Take Root & Futures Bloom

## The Facts You Need to Know About Our Work

### WHAT WE DO

We run Evening 64 Study Centers, organise Neighbourhood Children's Parliaments, and create hands-on learning experiences like robotics training throughout 8 districts in tamilnadu

### WHAT WE ACHIEVED

- **1,250 children** in our programmes
- **1200 students** Trained in STEM
- **450 students trained** in civic leadership

### Ways to collaborate

- Build safe learning spaces for children to study after school
- Donate learning materials - books, robotics kits, STEM tools
- Connect us with mentors - engineers, teachers, professionals who can inspire
- Volunteer your time - teach a skill, conduct workshops

### Package Options

| | |
|---|---|
| ₹50,000 | SUPPORT THE RUNNING COST OF A EVENING STUDY CENTER FOR 6 MONTHS |
| ₹50,000 | PROVIDE ROBOTICS KITS & TRAINING FOR 5 CENTERS |
| ₹1,25,000 | LEARNING MATERIALS FOR CHILDREN (BOOKS, STATIONERY, EDUCATIONAL TOOLS) |

80G Tax exemption available for contributions

DONATE

+91 89252 73548
www.assistfma.com



# கீச்சுகள்

பகிரப்பட்ட கனவுகளே மாற்றத்திற்கான அடிப்படை. எமது லட்சியங்களைச் செயல்பாடுகளாக மாற்ற உறுதுணையாக நின்ற நன்கொடை நிறுவனத்திற்கு எமது மனமார்ந்த நன்றிகள்.
விழிப்புணர்வு பெற்ற ஒவ்வொரு குழந்தையும், பாதுகாக்கப்பட்ட ஒவ்வொரு மரமும் நாம் இணைந்து அடைந்த வெற்றியின் சாட்சிகள்.
குழந்தைகளின் உரிமைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக நீங்கள் செய்துள்ள முதலீடு, ஒரு சிறந்த எதிர்காலத்தை நோக்கிய பயணத்தில் எமக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காகத் திகழ்கிறது.

நீதியான மற்றும் நிலையானதொரு உலகைப் படைக்க
நாம் தொடர்ந்து இணைந்திருப்போம்.

**வெளியீட்டாளர்**

அசிஸ்ட் (ASSIST)

சமூக மேம்பாட்டு அலுவலகம்
மதுரை மெயின் ரோடு, மணிகண்டம்,
திருச்சிராப்பள்ளி - 620 012.

+91 72008 05267
intfmado@gmail.com